Crl.Misc.39

D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.146/2022

**P.W**. 6(LW12)

| | |
|---|---|
| Name | : திரு.சரவணன் |
| Father/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2026

மனுவின் பேரில் திரு.சரவணன், காவல் ஆய்வாளர் இந்த வழக்கில் கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது சட்ராஸ் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் முனிசேகர் என்பவரின் கையெழுத்தும் கையொப்பமும் நன்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 17.07.2021ம் தேதி இரவு 20.00 மணியளவில் சட்ராஸ் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் முனிசேகர் நிலைய பொறுப்பில் இருந்தபோது கார்த்திக் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைபெற்று நிலைய குற்ற எண்.302/2021 இ.த.ச.பிரிவுகள் 279, 337 ல் வழக்கு பதிவு செய்து செய்து விசாரணை செய்து வைத்திருந்ததை காவல்

ஆய்வாளர் முனிசேகர் தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சி கார்த்தி என்பவரிம் மறு வாக்குமூலம் பதிவு செய்தார்.

**3.** பின்பு சாட்சிகள் கலா, புகழேந்தி, ஸ்ரீதர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

4. இந்த வழக்கில் இறந்துபோன நபர் நாகராஜ் என்பவரின் பிரேதத்தின் மீது செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. இவ்வழக்கின் எதிரியான பிரிட்டோ என்பவரை கடந்த 12.08.2021 அன்று காலை 10.00 மணியளவில் நிலையம் ஆஜரானவரை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தார்.

6. இவ்வழக்கில் காயம்பட்ட நாகராஜ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மேகநாதன் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேடு பெற்றார். **(விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. இவ்வழக்கில் இறந்துபோன நாகராஜ் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் மதிபா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றேன். **(பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

8. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனமான PY 01 CU 5369 என்ற பதிவு எண் கொண்ட மாருதி பலினோ என்ற காரை மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைக்குட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் முரளி என்பவரை விசாரணை செய்து ஆய்வு அறிக்கை பெற்றார். **(ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்த வழக்கில் காயம்பட்ட நபர் நாகராஜ் சிகிச்சை பலனில்லாமல் இறந்துவிட்டதால்

வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 இ.த.ச. விலிருந்து 279, 304(ஏ) இ.த.ச. பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தார் **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**9.** இத்துடன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(ஏ) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை 29.07.2021 அன்று தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 12 நாட்கள் காலதாமதமாகத்தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் இறந்துபோன நாகராஜ் அண்ணியிடம் சொல்லிவிட்டு பயிற்சிக்கு சென்றுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது என்றாலும், அவரது அண்ணியை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றாலும் சரிதான். பொதுவாக மோட்டார் வாகன ஆய்வாளர் அவரது ஆய்வு அறிக்கையில் காவல் ஆய்வாளர் சொல்லும் சங்கதிகளை பொறுத்து தான் எதிரியின் பெயர் விவரங்களை பூர்த்தி செய்வார் என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தை 25 நாட்கள் கழித்து தான் மோட்டார் வாகன ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அவரது ஆய்வு அறிக்கையில் விபத்தானது வாகனத்தில் உள்ள இயந்திர கோளாரால் நடைபெறவில்லை என்று சான்று வழங்கியுள்ளார் என்றால் சரிதான். ஆய்வு அறிக்கையில் வாகனமானது அதில் ஏற்பட்டிருக்கும் சேதாரங்களினால் சாலையில் தணிக்கை செய்ய இயலவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இயக்க முடியாத நிலையில் இருக்கும் வாகனத்தை ஆய்வு செய்து இயந்திரக் கோளாறுகளை அறிதியிட்டு சான்று வழங்க முடியாது என்றால் சரிதான்.

சம்பவத்தின் போது சாலையில் சென்றுக் கொண்டிருந்த விபத்தில் சம்மந்தப்பட்ட காரை தமிழ்நாடு அரசு பேருந்து ஒன்று இடது புறமாக முந்துவதற்கு முற்பட்டு காரை இடித்து விட்டு சென்றதினால் கார் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்துவிட்டது என்றாலும், அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், அந்த சங்கதிகளை மறைத்துவிட்டு பொய்யான ஒரு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து வழக்குக்கு ஏதுவாக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளன என்றாலும் வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.